செய்தி வெளியீடு எண்:396 நாள் : 12.08.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு திட்டங்களின் ஒன்றான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி ஆகியோர் முன்னிலையில் அனைத்து மாவட்ட தனித் துணை ஆட்சியர்கள் (சிறப்புத் திட்டங்கள்) அவர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.**

=====

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களது சீர்மிகு திட்டங்களில் ஒன்றான ‘‘மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம்’’ குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி ஆகியோர் முன்னிலையில் அனைத்து மாவட்ட தனித் துணை ஆட்சியர்கள் (சிறப்புத் திட்டங்கள்) உடனான ஆய்வுக் கூட்டம் இன்று (12.08.2015) சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், 30.6.2011 அன்றைய நாளில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

அதன்படி, முதற் கட்டமாக 2011–12ஆம் ஆண்டில், 25 லட்சம் மகளிருக்கும், இரண்டாவது கட்டமாக, 2012–13ஆம் ஆண்டில், 35 லட்சம் மகளிருக்கும், மூன்றாவது கட்டமாக, 2013–14ஆம் ஆண்டில் 35 லட்சம் மகளிருக்கும், விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டன. மேலும், 2014–15ஆம் ஆண்டில், நான்காவது கட்டமாக

45 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 40 லட்சத்திற்கு மேல் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள பொருட்கள் விரைவில் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஐந்தாவது கட்டமாக, 2015–16 ஆம் ஆண்டில், 45 லட்சம் மகளிருக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் பெறப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் ரூ.3,797 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக 2011–12ஆம் ஆண்டில், ரூ.1,370 கோடியும், இரண்டாவது கட்டமாக, 2012–13ஆம் ஆண்டில், ரூ.2000 கோடியும், மூன்றாவது கட்டமாக, 2013–14ஆம் ஆண்டில் ரூ.1500 கோடியும் செலவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்திற்காக 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் ரூ.3,797 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக இதுவரை 8,667 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தம் 1 கோடியே 35 லட்சம் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைத்து மாவட்டங்களிலும், மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பெறப்படும் மாவட்ட அளவில் பொருட்களின் தரங்களை சோதனை செய்தல், பொருட்களை கிடங்குகளில் பாதுகாப்பாக வைத்து பாதுகாத்தல், பொருட்களை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக பாதுகாப்பாக எடுத்து செல்லுதல், பயனாளிகளுக்கு வழங்குவதற்கு முன் சோதனை செய்தல், மாவட்டங்களில் பயனாளிகளுக்கு விநியோகம் செய்தல் இப்பொருட்களுக்கென அமைக்கப்பட்டுள்ள சேவை

மையங்களின் செயல்பாடுகள், ஆகியவை குறித்து மாவட்ட வாரியாக ஆய்வு செய்தார்கள்.

மாவட்டங்களில் பெறப்படும் மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் ஆகியவற்றை உரிய சோதனை செய்தபிறகுதான் பயனாளிகளுக்கு வழங்க வேண்டுமென்று அமைச்சர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் பொருட்களை உரிய சோதனைக்குப்பின் உடனடியாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் பயனாளிகளுக்கு வழங்குவதில் எவ்வித காலதாமதம் செய்யக்கூடாது என்றும் தெரிவித்தார்கள்

மேலும், மாவட்டங்களில் இப்பொருட்கள் வைக்கப்படும் கிடங்குகளின் பாதுகாப்பு, சேவை மையங்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை மாவட்ட மற்றும் மாநில அலுவலர்கள் அவ்வப்போது கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஐந்தாவது கட்டமாக, வழங்கப்படவுள்ள 45 லட்சம் எண்ணிக்கையின் முழு இலக்கினையும் இவ்வாண்டு இறுதிக்குள்முடிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் உத்திரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. தா.கி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், வருவாய்த் துறை செயலர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் (பொறுப்பு) திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையர், வருவாய்

நிருவாகம் முனைவர் மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள், அனைத்து மாவட்ட தனித் துணை ஆட்சியர்கள் (சிறப்புத் திட்டங்கள்) மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**